1974 மார்ச் 21]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1973-ம் ஆண்டிலிருந்து இதுவரை எத்தனை மாடுகளுக்கு சென்னை மாநகரில் இந்த முறை கையாளப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கைவசம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

Thiru B. VENKATASWAMY : Sir, we find it very difficult to store semen. So, may I know from the Hon. Minister whether he will make arrangements to de-freeze the semen so that more semen can be stored and distributed to semen banks and key village centres?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : செமனை ப்ரீஸ் பண்ணினாலும் கூட நீண்ட காலம் தாங்குவதில்லை. அதையும் நாம் தயார் செய்து வெகு சீக்கிரமாகப் பயன்படுத்த வேண்டியதாக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் திட்டத்தை விரிவாக்கும் முறையில் வெளிநாட்டிலிருந்து காளைகள் வரவழைக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த போதுமான புல்ஸ்--காளைகள் ஏற்கனவே நமது ஹோசூர் பண்ணையில் இருக்கின்றன.

திருச்சிராப்பள்ளியில் புதிய சாலை.

*543 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரத்தில், தில்லைநகர், தென்னூர் முக்கிய சாலையை இணைக்கும் சாலைக்கு தியாகி சாமிநாத சாஸ்திரி சாலை எனப் பெயரிட தீர்மானம் ஏதேனும் நிறைவேற்றி அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) தென்னூர் நெடுஞ்சாலையிலிருந்து தில்லை நகர் வழியாக புதிதாக அமைக்கப்படும் சாலைக்கு "டாக்டர் சுவாமிநாத சாஸ்திரி சாலை" என்று பெயரிடுவது குறித்த நகராட்சி மன்றத்தின் செயற்குறிப்பை திருச்சிராப்பள்ளி நகராட்சி பொறுப்பதிகாரி ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பினார். நகராட்சி மன்றச் செயற்குறிப்பை ஏற்றுக்கொண்டு, பொதுத் (தேர்தல்) துறையின் 6—2—74-ஆம் நாளிட்ட 392-ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு எப்போது அனுப்பப்பட்டது? அரசாங்கம் ஏதாவது இடையிலே தடை செய்ததா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலை என்ற பெயரிட வேண்டுமென்ற செயற்குறிப்பு திருச்சி நகர்மன்றத்திலிருந்து அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு 1972 ஆகஸ்டு திங்களில் நேரடியாக அனுப்பினார்கள். ஒரு பெயர் வைப்பது என்று சொன்னால் அது வருவாய்க் கோட்ட அதிகாரி மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும் அரசின் பொதுப் பிரிவின் தேர்தல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவர்களுடைய பரிந்துரையின் பேரில் அரசு ஆணை பிறப்பிக்கிறது. டாக்டர் சாமிநாத சாஸ்திரி சாலை என்று பெயரிடுவது குறித்து நேரடியாக அரசுக்கு அனுப்பப்பட்ட காரணத்தால் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அது அனுப்பப்பட்டு பரிந்துரை கேட்கப்பட்டது.

அரசு விதியின்படி சாதியின் பெயரால் தெருக்கள் இருக்கக் கூடாது என்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் சாதியின் பெயரைக் குறிப்பிடுவது சரியல்ல என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு அனுப்பியிருந்தார்கள். ஆனால் அரசு பரிசீலனை செய்து டாக்டர் சாமிநாத சாஸ்திரி அவர்களை சாஸ்திரி என்று சொன்னால்தான் திருச்சி மாவட்டத்திலும் மற்றும் மாநிலத்திலும் பலருக்குத் தெரியும்; அவர் சிறந்த தேசியவாதி மாத்திரமல்ல, பார்ப்பனர் வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் அவருடைய மகளுக்கே விதவா திருமணத்தை நடத்தி வைத்தவர் என்ற காரணத்தால் சாமிநாத சாஸ்திரி என்று பெயரிடுவது பொருத்தமானது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.